17th February 1959]

Medical College for Tanjore district

* 440 Q.—Sri M. D. THIAGARAJA PILLAI : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா :—

(அ) தஞ்சை ஜில்லாவில் வைத்தியக் கல்லூரி கட்டிடம் கட்ட மத்திய அரசாங்க கிராண்டுக்கு சென்னை அரசாங்கம் எழுதியிருக்கிறதா ?

(ஆ) எழுதியிருந்தால் எப்பொழுது எவ்வளவு தொகைக்கு ?

(இ) கல்லூரி கட்டிடம் ஆரம்பிப்பதற்கு மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

(ஈ) இந்த கட்டிடங்கள் கட்டுவதற்கு ஜில்லா போர்டாரால் சென்னை அரசாங்கத்திற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) & (*b*) Yes, on 30th April 1958, for Central assistance on the approved pattern.

(*c*) The Chief Engineer, Public Works Department (General), is drawing up plans and estimates for the construction of buildings.

(*d*) Rs. 30 lakhs.

Sri A. VEDARATHNAM : மத்திய அரசாங்கத்திலிருந்து இந்த ஆஸ்பத்தரிக்கு எவ்வளவு உதவி கிடைக்கிறது ? தஞ்சை ஜில்லா போர்டிலிருந்து எவ்வளவு நிதி இதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள் ?

The Hon. Sri M. A. MANICKAVELU: தஞ்சை ஜில்லாபோர்டிலிருந்து ஒதுக்கியதைப் பற்றி சொன்னேன். அவர்கள் ஒதுக்கியது, 30 லட்சம். மத்திய அரசாங்கத்திடம், " யூஷ்வல் பாட்டேர்ன் " பிரகாரம் கேட்டிருக்கிறோம். அதுபற்றிய விவரம் தெரியவில்லை. எவ்வளவு கொடுப்பார்கள், என்னனென்னவென்று தெரியவில்லை.

Mr. SPEAKER : Questions are over.

[Note.—An asterc (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II. STATEMENT BY THE HON MINISTER FOR LOCAL ADMINISTRATION.

Mr. SPEAKER : The Hon. Minister for Local Administration will now make a statement with reference to the answer given to Question No. 12 on the 5th February 1959.

* The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : Mr. Speaker, in reply to starred question No. 12 by Sri K. Sattanatha Karayalar, I stated on 5th February 1959 that fishing in river estuaries and reservoirs are regulated by issue of licences and by mesh regulations by the Fisheries Department. Destructive and sweep types of nets are prohibited from operation according to the mesh restrictions. Small sized fry and other fingerlings are not allowed to be captured and if captured, they are requested to be released back into the water. It has subsequently been found that the question purports to the measures taken by the Government to safeguard the lives of the fishermen who fish in river estuaries during high tide. In this connection, it may be stated that the tide in river estuaries during high tide will be about 3 feet higher than at normal times and it is not difficult for the fishermen to negotiate it. Further, during high tide there will be increased catches from the river estuaries and, so far, no unhappy incidents to fishermen or to their

[Srimathi Lourdhammal Simon] [17th February 1959

appliances have been reported to have occurred due to fishing operations. So, the question of preventing fishing in river estuaries during high tide does not arise.

MR. SPEAKER : The next item on the agenda is Government Bills.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I think there is a motion under rule 40 of the Assembly Rules.

MR. SPEAKER : Yes. But the hon. Member who has given notice of the same is absent. As nobody else can move it, I think we can take it up tomorrow. I think the Hon. Minister has no objection to it.

THE HON. SRI M. A. MANICKAVELU : The only thing is that the Minister will not be here tomorrow.

MR. SPEAKER : All right then. The hon. Member will miss the chance. But I cannot help it, because, nobody else can move it.

III. GOVERNMENT BILL.

THE MADRAS OPEN PLACES (PREVENTION OF DISFIGUREMENT) BILL, 1958 (L.C. BILL NO. 8 OF 1958).

10-10 p.m. * THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, I move—

"That the Madras Open Places (Prevention of Disfigurement) Bill, 1958 (L.C. Bill No. 8 of 1958) [a], as passed by the Council, be taken into consideration."

கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா முன்பு இந்த மன்றத்தில் கொண்டு வரப்பட்டு ஒரு பொறுக்குக் கமிட்டியின் பரிசீலனைக்கு விடப்பட்டது.

(Deputy Speaker in the Chair.)

அந்தப் பொறுக்குக் கமிட்டி ஒவ்வொரு பிரிவையும் நன்றாகப் பரிசீலனை செய்து சில திருத்தங்களை செய்திருக்கிறது. முக்கியமான திருத்தம் என்னவென்றால், மத சம்பந்தமான அபிப்பிராயங்களோ, அல்லது நடவடிக்கைகளோ, அல்லது சமூக சம்பந்தமான அபிப்பிராயங்களோ, அவைகளை மாற்றி அமைக்கவேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு இம்மாதிரி விளம்பரங்கள் அமைக்கப்பட்டால் அதற்கு விதி விலக்கு வேண்டும் என்பது தான். இதை கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் உணர்வார்கள்.

கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவின் முக்கிய நோக்கம் ஆட்சேபகரமான விளம்பரங்கள் நகரங்களிலே முக்கியமாக சுவர்களில் ஒட்டப்படுகின்றன. அவைகள் நகரங்களின் அழகை கெடுப்பதோடு, வேறு வகையிலும் ஆட்சேபகரமான விளம்பரங்களாக இருக்கின்றன சில. ஆட்சேபகரம் என்றால், பலாத்காரத்தை தூண்டக்கூடியவை, பிறர் மனதை புண்படுத்தக் கூடியவை, ஆபாசமானவை என்ற மூன்று பிரிவுகளாக பிரிக்கலாம். இம்மாதிரி விளம்பரங்களைப் போடுவது நகரத்தின் அழகை கெடுப்பதுமட்டுமல்ல, வேறு வகையிலும் அது நல்லது அல்ல என்பதை எல்லா அங்கத்தினர்களும் ஒப்புக் கொள்வார்கள். இதனால் விளம்பரம்

---

[a] Printed as Appendix V on pages 173-176 infra.